பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 61331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 19] சென்னை: ஐப்பசி 23 (9—11—71) செவ்வாய் வெளியீடு: ஐப்பசி 24 (10—11—71) புதன் [இதழ்: 122

தனியார் வாகனங்கள்

அரசுடைமையாக்க அவசரச் சட்டம்

புதுடில்லி, நவ. 9—
அவசியம் ஏற்பட்டால் தனியார் வாகனங்கள் (பஸ்கள், லாரிகள், கார்கள்) கோரிப் பெறுவதற்கு அதிகாரம் அளிக்கும் அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பிப்பது என்று மத்திய அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஆந்திரத்தில் சுற்றுப்பயணம் செய்யும் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டதும் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்படும்.

இலண்டனில் முதல்வர் கலைஞர்

பம்பாயில் சிறப்பான வரவேற்பும் வழியனுப்பும்

சென்னை விமான நிலையத்தில் பல்லாயிரவர் கூடிநின்று வழியனுப்பிவைத்த காட்சி

சென்னை, நவ. 9–

நேற்று மாலை தமது வெளிநாட்டுப் பயணத்தைத் துவங்கிய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், தம் குழுவினருடன் இலண்டன் போய்ச் சேர்ந்தார்.

இலண்டனில் உள்ள நமது தூதுவரக அதிகாரிகளும் மற்றும் இலண்டன்வாழ் தமிழ்மக்களும் விமான நிலையம் வந்திருந்து வரவேற்று அழைத்துச் சென்றனர்.

பம்பாயில்:

நேற்று மாலை 6-40 மணிக்கு விமானத்தில் சென்னையிலிருந்து புறப்பட்ட முதல்வரும் — அவரது குழுவினரும் இரவு 8-30 மணியளவில் பம்பாய்ப் போய்ச் சேர்ந்தனர்.

பம்பாய் விமான நிலையத்தில், பம்பாய் தி. மு. கழகத்தினரும் — பம்பாய்வாழ் தமிழ் மக்களும் குழுமியிருந்து வரவேற்றனர்.

அங்கு சிறிது ஓய்வுக்குப் பின் இரவு 1-மணியளவில் இலண்டனுக்குப் பயணமாயினர்.

முதல்வர் கலைஞருடன், முரசொலி மாறன் எம்.பி., தமிழக அரசின் நிதித்துறைச் செயலாளர் திரு. வெங்கட்ரமணன் ஆகியோரும் சென்றுள்ளனர்.

அண்ணாவுக்கு அஞ்சலி

தமது வெளிநாட்டுப் பயணத்தைத் துவக்குமுன் நேற்றுக் காலை பேரறிஞர் அண்ணா அவர்களின் கல்லறைக்குச் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார் முதல்வர்; முரசொலி மாறனும் உடனிருந்தார்.

இல்லத்தில்:

கலைஞர் வெளிநாடு செல்வதை முன்னிட்டு அவரை வாழ்த்தி வழியனுப்பி வைக்கும் பொருட்டு நேற்று அதிகாலையிலிருந்தே கோபாலபுரம் முதல்வர் இல்லத்தில் ஏராளமானவர்கள் மாலையும் கையுமாக வந்து குழுமியபடியிருந்தனர்.

ஆளுநர் வாழ்த்து

ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் முதல்வரின் இல்லம் வந்து மாலையணிவித்து வாழ்த்திச் சென்றார்; அமைச்சர்கள், சட்டமன்ற — நாடாளுமன்ற உறுப்பினர்கள், சென்னை — மதுரை மேயர்கள், நகராட்சிமன்றத் தலைவர்கள், கழக முன்னணித் தோழர்கள், கழக மாவட்டச் செயலாளர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், கலையுலகப் பிரமுகர்கள், ஆதீனகர்த்தர்கள், நீதிபதிகள் மற்றும் அரசுத்துறை அதிகாரிகள், மற்றும் கழகத் தோழர்கள் உட்பட ஏராளமானோர் முதல்வரின் இல்லம் வந்து வாழ்த்திச் சென்றனர்.

வழிநெடுகிலும் வழியனுப்பு விழா

மாலை 4-52 மணிக்கு முதலமைச்சர் கலைஞர், தமது இல்லத்திலிருந்து திறந்த காரில் புறப்பட்டார்; அமைச்சர்கள் அனைவரும் உடன் வந்தனர்.

முதல்வரின் இல்லத்தின் முன்பும் — கோபாலபுரம் தெருவிலும் மக்கள் கூடிநின்று முதல்வரை வழியனுப்பினர்.

தேனாம்பேட்டை 'அன்பக'த்தின் முன்பு தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை சார்பில் காட்டூர் கோபால் எம்.எல்.சி., மற்றும் ஏராளமான தொழிலாளத் தோழர்கள் மாலை அணிவித்தனர்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு அருகில் சீருடை அணிந்த மாணவர்களும் — ஆசிரியர்களும் முதல்வருக்கு மலர் மாலைகள் அணிவித்து மகிழ்ச்சி தெரிவித்தனர்; மாடல் பள்ளி மாணவர்களும் மாலை அணிவித்தனர்.

சைதைத் தொகுதித் துவக்கத்தில் பிரும்மாண்டமான வளைவு கட்டப்பட்டிருந்தது; முதல்வர் கலைஞருக்கு அலங்கரிக்கப்பட்ட பட்டத்து யானை மாலை ஒன்றை அணிவித்தது; ஆயிரக்கணக்கான மக்கள் ஆரவாரம் செய்து கைபொலித்தனர்; பாண்டு வாத்தியங்கள் முழங்கின.

வெண் புறா ஒன்றை விண்ணில் பறக்கவிட்டார் — கலைஞர்.

சைதைப் பகுதி மாநகராட்சி உறுப்பினர்களும் — தோழர்களும், கலைஞருக்கும் — மாறனுக்கும் மலர் மாலைகள் அணிவித்தனர்.

சைதைப் பகுதிச் செயலாளர் சைதை சம்பந்தம், முதல்வரிடம், வண்ண ஆண் மயில் ஒன்றை அன்பளிப்பாக அளித்தார்.

சின்னமலைப் பகுதியில் அழகான பந்தல் அமைக்கப்பட்டு கொடிகள் பட்டொளி வீசிப் பறந்தன; முதல்வர், புறாக்கள் இரண்டை நீலவானத்தில் நோக்கிப் பறக்க விட்டார்.

பாண்டு வாத்திய அணிவகுப்பு மரியாதை தரப்பட்டது.

ஆலந்தூரில் கழகத் தோழர்கள், இசை வாத்தியங்கள் முழங்க, முதல்வரை வரவேற்று வாழ்த்தி வழியனுப்பினர்!

(4-ம் பக்கம் பார்க்க)

பஞ்சாப் எல்லையில் பாகிஸ்தானின் தற்காப்பு நடவடிக்கைகள்

பீரங்கிக் குகைகள் — சுரங்கக் கோட்டைகளை உருவாக்கியிருக்கிறது

கிராமங்கள் கோட்டையாகின்றன — டாங்கிப் படை எதிர்ப்பு அகழிகள் அமைக்கப்படுகின்றன

மேற்கு எல்லையில் ஓர் இடம், நவ. 9 –

பஞ்சாப் எல்லை நெடுகிலும் பாகிஸ்தான், தற்காப்பு அமைப்புகளை அமைத்திருக்கிறது; 600 கெஜத்திற்கு ஒரு பீரங்கிக் குகை வீதம் பல குகைகளைக் கட்டியிருக்கிறது; சிமெண்டுக் கூடாரங்களை எழுப்பியிருக்கிறது; கிராமங்கள் கோட்டையாக்கப்பட்டுள்ளன; ஆங்காங்கு டாங்கிப்படை — எதிர்ப்பு அகழிகள் அமைந்துள்ளன; இதைத் தவிர, ஆறுகள் — ஓடைகள் போன்ற இயற்கைப் பாதுகாப்புகளும் உள்ளன.

பதுங்கியவண்ணம் நடமாடுவதற்குரிய அகழிகளுக்கு மிகவும் முன்னெச்சரிக்கையாக மறைப்புகளை அமைத்துள்ளனர்; எல்லாத் தற்காப்புப் படை நிலைகளையும் அமைத்துவிட்டனர்; டாங்கிகள் — காலாட்படை வீரர்கள் வராமல் தடுப்பதற்குரிய கண்ணிகள் வைத்துள்ளனர்; அதற்கேற்ப, தரைமட்டமான வலைப் பின்னல்களைச் சிக்கலாகவும் வைத்துள்ளனர்.

படை நடமாட்டத்துக்காக மற்றவகையில் நிறைய கவச மோட்டார்களும் ரோந்து குழுக்களும் — துணைப் பட்டாளங்களும் — வீரர்கள் ஏறிவருவதற்கான வண்டிகளில் குறு பீரங்கிகளும் இருக்கின்றன.

பிரிகேட் குவிகிறது

பஞ்சாபிலுள்ள இந்தியா—பாகிஸ்தான் எல்லையின் தென்கோடியில் — கலைமான்கி பாலத்திற்கு நேர் எதிர்புறத்தில், பாகிஸ்தான் இராணுவ ஆட்சியினர், 105வது சுயேச்சை பிரிகேடை கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றனர்.

பிரோஸ்பூர் மாவட்டத்தில் பசில்கா எதிரில் இந்த பிரிகேடு உள்ளது (ஒரு பிரிகேடு ஏறக்குறைய மூன்று காலாட்படை அடங்கியதாகும்; இதில் சில சமயம் பீரங்கிப் படையும் இடம் பெறுவது உண்டு).

சுலேமான் முகப்புக்கு அருகில் கொண்டுவரப்பட்டுள்ள பாகிஸ்தான் படைகள், அகழிகள் தோண்டுவதிலும் — பதுங்கும் வளைகள் கட்டுவதிலும் சுறுசுறுப்பாக இருக்கின்றன.

விமானங்கள் நிற்க சுரங்கக் கொட்டகைகள்

பல விமானத் தளங்களைப் பாகிஸ்தான் கட்டி முடித்திருப்பதாகவும், விமானங்கள் நிற்பதற்கான சுரங்கக் கொட்டகைகளைக் கட்டியிருப்பதாகவும் தெரிகிறது.

குஜ்ரான்வாலா, பஸ்ரூர், லயால்பூர் இகாராசர்கோதா மியான்வாலி முல்டான், பவால்பூர் ஆகிய இடங்களிலும், சிந்து மாநிலத்தில் கட்சுக்கு எதிரில் பாதீனிலும் பாகிஸ்தான் விமான நிலையங்களையும் — விமானங்கள் இறங்கி ஏறக்கூடிய குறு தளங்களையும் வைத்துக்கொண்டிருக்கிறது.

பூஞ்ச் பகுதியில் படை நிலைகள்

பூஞ்ச் பகுதியில் பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள ஹாஜிபூர் அருகில் — போர்நிறுத்தக் கோட்டிற்கு அருகில், சீர்கி, இராசா — இராணி படை நிலைகளைப் பாகிஸ்தான் பலப்படுத்தியிருக்கிறது.

இந்த இராணுவம் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் பாகிஸ்தான் படைகள் நடமாட்டம் கணிசமாக இருக்கிறது.

1965 செப்டம்பரில் இராசா — இராணி படை நிலைகள் இந்திய இராணுவம் பிடித்துக்கொண்டதும், டாஷ்கண்ட் ஒப்பந்தத்தையடுத்து இவை பாகிஸ்தானுக்குத் திருப்பித் தரப்பட்டதும் நினைவுகூரத்தக்கது.

பாகிஸ்தான் மேலிடத் தலைவர்களிடை கருத்து வேற்றுமை

லாகூர், நவ. 9—

போர் அபாயத்தைக் கருதி, லாகூர் எல்லையிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கட்கு இழப்பு ஈடு தருவது குறித்தும், அவர்களுக்கு மறுவாழ்வுக்கு வசதி செய்து தருவது குறித்தும் அதிபர் யாகியா கானுக்கும் — அவரது நெருங்கிய நண்பரான லெப்டினன்ட்-ஜெனரல் மீர்ஜாடாவுக்கும் இடையே கடுமையான கருத்து வேற்றுமை ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

எல்லைப் பகுதியிலிருந்து கட்டாயமாக வெளியேற்றப்பட்டிருக்கும் மக்களில் மூன்றில் ஒருவர் பாகிஸ்தான் இராணுவ வீரர்களின் குடும்பத்தினராம்.

பாகிஸ்தானுக்கு இனி ஆயுதம் இல்லை

அமெரிக்கா திட்டவட்ட அறிவிப்பு

சீனாவுக்கு பூட்டோ 'காவடி' எடுத்ததன் காரணம் அம்பலம்

வாஷிங்டன், நவ. 9—

பாகிஸ்தானுக்கு ரூ 270 கோடி மதிப்புள்ள இராணுவச் சாதனங்களை ஏற்றுமதி செய்வதற்கான லைசென்சுகளை ரத்து செய்துவிட்டதாக அமெரிக்க அரசு அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறது.

இந்தியாவுக்கும் — அமெரிக்காவுக்கும் இடையில் நிலவிவந்த கருத்து வேற்றுமை இம்முடிவின் மூலம் நீங்கிவிடுகிறது.

பாகிஸ்தானுக்கு இனி இராணுவச் சாதனங்கள் ஏற்றுமதி செய்ய எந்த ஒரு லைசென்சும் இப்போது இல்லை; இனிப் பாகிஸ்தான், அமெரிக்க ஆயுதங்களைப் பெறுவதற்கு வழி எதுவும் கிடையாது.

பாகிஸ்தானுடன் அமெரிக்கா தொடர்பு கொண்டு, 'இனிமேல் உங்களுக்கு ஆயுதம் கொடுக்கமாட்டோம்' என்று அமெரிக்கா முன்பே கூறிவிட்டதாம்.

இதைத் தொடர்ந்துதான், பூட்டோவை சீனாவுக் [illegible] ர அவசரமாக யாகியா கான் அனுப்பினார்.

அமெரிக்கா ஆயுதம் கொடுக்க மறுத்துவிட்டதால், சீனாவிடம் உதவி கேட்கவே பூட்டோ அனுப்பப்பட்டார்.

சிலம்பு தந்த இளவலுக்குச் சிலை

தமிழகத் தலைநகரில் கலைஞர் திறந்துவைத்தார்

நாவலர் — சிலம்புச் செல்வர் — அமைச்சர் என். வி. நடராசன் பங்கேற்ற சிறப்பு விழா

சென்னை, நவ. 8—

சென்னைக் கடற்கரையிலுள்ள அண்ணா சதுக்கத்தின் (கம்பர் சிலைக்கு அருகில்), சிலப்பதிகாரத்தை எழுதிய இளங்கோ அடிகளின் சிலைத் திறப்பு விழா, நேற்று நடைபெற்றது.

விழாவுக்கு, கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமைதாங்கிப் பேசுகையில், 'இளங்கோவடிகளுக்குச் சிலை எடுத்தது, தமிழுக்கு ஏற்றமும் — சிறப்பும் தருவதாகும்' என்றார்.

விழாவுக்கு வந்திருந்தவர்களை, அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் வரவேற்றார்.

சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் சிறப்புரை ஆற்றுகையில், 'இளங்கோவடிகளுக்குச் சிலை வைத்ததால், கோடிக்கணக்கான தமிழர்களின் உள்ளம் குளிர்ந்தது' என்று குறிப்பிட்டார்.

சிலை அமைத்த சிற்பி வெங்கடேசனுக்குக் கலைஞர் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

இளங்கோவடிகளின் சிலையை, கலைஞர் கருணாநிதி அவர்கள் திறந்துவைத்தார்; மேடையிலிருந்த பித்தானை அழுத்தியதும், சிலையை மூடியிருந்த பட்டுத் துணி விலகியது; அதைத் தொடர்ந்து சிலையின்மீது பூமாரி பொழியப்பட்டது.

அதன்பின், முதல்வர் கலைஞர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நம்மை ஆளாக்கிய அண்ணன் உறங்கும் பகுதியில் இளங்கோவடிகளின் சிலை அமைவது எவ்வளவு பொருத்தமானது என்பதை இங்கே பேசியவர்கள் எடுத்துரைத்தார்கள்.

உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற வேளையில், தமிழ்ச் சான்றோருக்கும் — தமிழகத்து வீரப் பெருமக்களுக்கும் அண்ணன் தலைமையிலே சிலை வைத்தோம்; அன்றைக்கே, 'இளங்கோவடிகளின் சிலை வைக்கவேண்டும்' என்ற எண்ணம் இருந்தாலும், அதற்கு ஒரு தூண்டுகோல் தேவை என்பதைப் போல், சென்னையில் ஆண்டுதோறும் நடைபெறும் இளங்கோவடிகள் விழா ஒன்றில் சிலம்புச் செல்வரும் — மற்றவர்களும், 'இளங்கோவடிகளுக்குச் சிலை அமைக்கப்பட வேண்டும்' என்று வற்புறுத்தினார்கள்; நானும் ஒப்புக்கொண்டேன்.

இந்த ஆண்டு நடைபெற்ற விழாவில், 'இன்னும் சிலை வைக்கப்படவில்லையே' என்று அவர்கள் குறிப்பிட்டபோது நான், 'இளங்கோவடிகளின் சிலை தயாராகிவிட்டது; விரைவில் சிலை அமைக்கப்படும்' என்று உறுதியளித்தேன்.

அதன்படி இந்த விழா, யார் தலைமை ஏற்று நடத்த வேண்டுமோ அவர் தலைமை ஏற்க — யார் சிறப்புரை ஆற்றவேண்டுமோ அவர் சிறப்புரையாற்றிட — பல்லாயிரக்கணக்காகக் கூடியுள்ள உங்கள் வாழ்த்துக்களோடு நடைபெறுகிறது.

சிலம்புச் செல்வர் அவர்கள், 'தமிழ் உணர்ச்சியுடன் தமிழுக்குப் பெருமை சேர்க்கும் விழாவில் அனைத்துக் கட்சியினரும் பங்கேற்க வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

நான் மேடையிலிருந்தே காண்கிறேன் — கட்சிச் சார்பில்லாமல் பலர் இங்கே வந்து கலந்துகொண்டிருக்கிறார்கள்; அவர்களது பரந்த உள்ளத்தைப் பாராட்டுகிறேன்; அவர்களது பெருந்தன்மையை மெச்சுகிறேன்; தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, முன்னாள் அமைச்சர் — மரியாதைக்குரிய திருமதி ஜோதிவெங்கடாசலம் அவர்கள் இந்த விழாவில் கலந்துகொண்டிருக்கிறார்; கட்சிப் பற்றற்ற முறையில் பெருந்தன்மையோடு இந்த விழாவில் பங்கேற்றதற்காகத் தமிழர்கள் சார்பில் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

சிலப்பதிகாரத்தில் சிலம்புச் செல்வர் அவர்கள் எவ்வளவு ஆர்வமும் எழுச்சியும் கொண்டவர் என்பது நாம் அறிந்ததே.

அதேபோன்று, தி. மு. கழகத்திலுள்ள நாவலரும் — மற்ற பிற தமிழ் அறிஞர்களும் — அவர்களை ஆளாக்கிய அறிஞர் அண்ணா அவர்களும், சிலப்பதிகாரத்தில் அதிக உடன்பாடு கொண்டவர்கள்.

புலவர்கள் மத்தியில் மட்டுமே இருந்த சிலப்பதிகாரத்தை நாடக உருவில் — திரைப்பட உருவில் மக்கள் மத்தியில் கொண்டுவர வேண்டும் எனப் பணியாற்றி அதில் வெற்றியும் பெற்றோம்; பாராட்டுக்களையும் பெற்றிருக்கிறோம்.

சென்னையில் இளங்கோவடிகளுக்குச் சிலை அமைப்பது பற்றி எழுந்த 'புகார்' பற்றி இங்கே சிலம்புச் செல்வர் குறிப்பிட்டார்; இளங்கோவடிகளே தமது காப்பியத்தை, 'புகாரில்' தான் துவக்குகிறார்.

அண்ணா கல்லறைக்குப் பக்கத்தில் கம்பனும் — இளங்கோவடிகளும் இருப்பது, 'துவாரபாலகர்கள்'போல் இருப்பதாகச் சிலர் குறை கூறு[illegible]கிறார்கள்.

அண்ணாவே [illegible]ருந்தால்கூட, 'என்னைத் தா[illegible]தினாலும், கம்பனையும் — இள[illegible]காவையும் உயர்த்திப் பேசி[illegible]ார்களே — அந்த அளவு த[illegible]ணர்ச்சி பெற்றுவிட்டார்கள[illegible] என்றுதான் கூறுவார்.

எங்களைத் தாக்குபவர்கள் ஒரு புதிய முறையைக் கையாளுகிறார்கள்; எங்களை இறக்கிப் பேசிட — தாக்கிப் பேசிட, அண்ணாவை உயர்வாகப் புகழ்ந்து பேசத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஆனால், இதே இராசதந்திரத்துடன் 10 ஆண்டுக் காலம் இருந்தாலாவது; பலன் கிடைக்கும்; ஆனால், அடுத்த திங்களே? சுயரூபத்தைக் காட்டிவிடுகிறார்கள்; 'அண்ணாவுக்குத் துவாரபாலகரா கம்பனும் — இளங்கோவும்' என்று கேட்டுவிடுவார்கள்; பாவம் — அவர்களது இராசதந்திரம் பலவீனமானது!

'அண்ணா அவர்கள் இருந்து இந்த விழாவைக் காணவில்லையே' என்று வருத்தப்பட்டார் சிலம்புச் செல்வர்; நானும் இந்த எழில்மிகுந்த விழாவைப் பார்க்கிறேன்; அதில் எழுச்சியோடு வந்து கலந்துகொண்ட உங்களையெல்லாம் பார்க்கிறேன்; இந்த விழாவை வாழ்த்தவந்த பைந்தமிழ் மனம் கொண்டோரையும் பார்க்கிறேன்.

ஆனால் எனது நெஞ்சம் — பேதை நெஞ்சம் ஒரு கனவு காண்கிறது; ஒரு கணநேரக் கனவு காண்கிறது; — அந்த வெண்மணற்பரப்பில் நீள் துயில் கொண்ட அண்ணன் ஒரு நிமிடம் எழுந்து வந்து, 'தம்பிகளே — நான் நினைத்ததையெல்லாம் நீங்கள் செய்கிறீர்கள்' என்று ஒரு வார்த்தைச் சொன்னால் போதும்.

ஆனால் அண்ணன், எழுந்துவராத துயிலில் இருக்கிறார்; என்றாலும், அண்ணன் வடிவில் இங்கே பல்லாயிரக்கணக்கில் தமிழ் நெஞ்சங்கள் கூடியிருந்து வாழ்த்துகின்றன; அந்த வாழ்த்துக்களில், 'அண்ணன் இருக்கிறார் — அண்ணன் இருக்கிறார்' என மகிழ்ந்து இந்த விழாவை நடத்துகிறேன்."

வறட்சிப் பகுதிகளில் குழாய்க் கிணறுகள்

ஐந்தாண்டுகளில் தமிழக அரசு நிறைவேற்றத் திட்டம்

சென்னை, நவ. 8—

தமிழ்நாட்டில் வறட்சியாலும் — காலராவாலும் பாதிக்கப்பட்ட கிராமங்களில் 8 850 குழாய்க் கிணறுகளை அமைக்கத் தமிழக அரசு எண்ணியிருக்கிறது; 'யூனிசெப்' நிறுவனத்தின் உதவியுடன் ஐந்தாண்டுக் காலத்திற்குள் இவை வெட்டப்படும்; கடினமான பாறைப் பகுதிகள் அனைத்தும் இத்திட்டத்தில் இடம்பெறும்.

ரூ. 2.71 கோடி செலவில் குழாய்க் கிணறுகளுக்கான ஒரு விரிவான கிராமப்புற நீர் வழங்கும் திட்டத்திற்குத் தமிழக அரசு அனுமதி வழங்கியிருக்கிறது; 'யூனிசெப்' நிறுவனம் 15 துளை போடும் கருவிகள், இன்னபிற முக்கியச் சாதனங்களை அளிக்கும்.

தமிழ்நாடு குடிநீர் — வடிகால் வாரியம், இத்திட்டத்தை 1971—72-லிருந்து 5 ஆண்டுகளில் நிறைவேற்றும்; கருவிகளின் செயல் விளக்கம் தருவதற்காக 'யூனிசெப்' ஊழியர்கள் சென்னை நகருக்கு வருகிறார்கள்; அதற்குப் பிறகு துளை போடும் பணிகள் துவங்கும்.

அடுத்த நான்கு மாதங்களில் சுமார் 200 குழாய்க் கிணறுகள் அமைத்து முடிக்கப்படும்.

எந்தெந்தக் கிராமங்களில் குழாய்க் கிணறுகளை அமைப்பது என்பதை அரசு நிர்ணயித்திருக்கிறது.

தமிழ்நாட்டில் 11 மாவட்டங்களில் சுமார் 1,800 கிராமங்கள் இத்திட்டத்தில் இடம் பெறும்.

துளை போடும் சாதனங்களைக் கொண்ட இரண்டு பெரிய டிரக்குகளை இன்று சென்னையில் உள்ள 'யூனிசெப்' ஊழியர்கள் தமிழ்நாடு அரசாங்கத்திடம் முறைப்படி ஒப்படைத்தார்கள். ஒவ்வொரு டிரக்கிலும், ரூ. 3.25 இலட்சம் பெறுமானமுள்ள சாதனங்கள் உள்ளன.

தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் கருணாநிதி இவற்றைப் பெற்றுக்கொண்டார்.

தமிழ்நாடு குடிநீர் — வடிகால் வாரியத்தின் தலைவர் செ. கந்தப்பனிடம் இவற்றை முதலமைச்சர் கொடுத்தார்.

இந்த உதவிக்காக 'யூனிசெப்' நிறுவனத்திற்கு முதல்வர் நன்றி தெரிவித்தார்.

முன்னேற்றச் சங்கப் பேரவை நடத்தும் போனஸ் போராட்டம்

தமிழகம் — கேரளம் — மைசூர் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளிலும் நடைபெறும்

பேரவைப் பொதுச்செயலாளர் காட்டூர் கோபால் அறிவிப்பு

சென்னை, நவ. 9—

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் தலைமைச் செயற்குழு முடிவுக்கேற்ப, 14-11-71 அன்று போனசு சட்டத் திருத்தப் போராட்டம் நடைபெறவிருக்கிறது.

இந்தப் போராட்டம் தமிழ்நாட்டில் மட்டுமன்றி, கேரளம் — மைசூர் ஆகிய மாநிலங்களிலும், அந்தமான் நிக்கோபார் தீவுகளிலும், பேரவையில் இணைந்துள்ள தொழிலாளர் முன்னேற்றச் சங்கங்கள் சார்பில் நடைபெறும்.

இந்தப் போராட்டத்தின் முதல்கட்டமாக ஊர்வலம் — பொதுக்கூட்டங்கள் நடத்தி, தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்.

இந்தக் கூட்டங்களில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களின் நகல்கள் மத்திய அரசுக்குத் தந்தி மூலம் அனுப்பிவைக்கப்படும்.

நிறைவேற்ற வேண்டிய தீர்மானங்களின் வாசகம் வருமாறு:—

"தொழிலாளர்களுக்குப் போனசாகக் குறைந்தபட்சம் அவரவரது மொத்தச் சம்பளத்தில் 4 சதவிகிதம் என்று இருப்பதை 8 1/3 சதவிகிதமாக உயர்த்தப்படுவதற்கான வகையிலும், உயர்ந்தபட்சம் 20 சதவிகிதம் என்ற எல்லையை எடுத்துவிட வேண்டுவதற்குமான வகையிலும் சட்ட திருத்தம் செய்வதற்கு மத்திய அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறது."

"இந்தக் கோரிக்கைகளுக்காக இனிமேல் குழுக்கள் போடுவது — முத்தரப்பு மாநாடுகள் கூடுவது என்கின்ற வகையில் காலம் தாழ்த்தாமல், நடப்பு நாடாளுமன்றக் கூட்டத் தொடரிலேயே இந்தச் சட்டத்திற்கு வழி செய்தாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது."

14-11-71 அன்று பொதுக்கூட்டங்கள் நடைபெறவிருக்கும் ஊர்களும் — கலந்துகொள்ளும் சொற்பொழிவாளர்களின் பெயர்களும் வருமாறு:—

சென்னை
நாஞ்சில் கி. மனோகரன் எம்.பி.
அரங்கண்ணல் எம்.எல்.ஏ.
காட்டூர் கோபால் எம்.எல்.சி.
மேயர் சா. கணேசன்.

திருச்சி
என். வி. என். சோமு எம்.சி.
ஜி பராங்குசம் எம்.எல்.சி.
எஸ். ஏ. ஜி. ராபி, திராவிடமணி.

கோவை
அறிவுடைநம்பி எம்.எல்.சி.
டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி.
எஸ். ஏ. இராசமாணிக்கம் எம்.எல்.சி.
சி. டி. தண்டபாணி எம்.பி.
கருப்பசாமி.

மதுரை
வி. எஸ். கோவிந்தராசன்
மேயர் எஸ். முத்து எம்.எல்.சி.
தா. கிட்டிணன் எம்.பி.
கோவை ஏ. என். சாமி.

தஞ்சாவூர்
மன்னை நாராயணசாமி எம்.எல்.சி.
சோமசுந்தரம் எம்.பி.
எஸ். நடராசன் எம்.எல்.ஏ.
எல். கணேசன் எம்.எல்.ஏ.

சேலம்
ஈ. ஆர். கிருட்டிணன் எம்.பி.
ஆர். செயராமன் எம்.எல்.ஏ.
இரா. வெளளிங்கிரி (கோவை)
பழனிச்சாமி, நகராட்சித் தலைவர்.

நாகர்கோவில்
எம். மஸ்தான் எம்.சி., பாலன்,
ஏ. திரவியம், நெல்லை ஆறுமுகம்.

காஞ்சிபுரம்
சிட்டிபாபு எம்.பி.
க. அறிவழகன் எம்.எல்.சி.
கே. டி. எஸ். மணி
சென்னை சுப்பிரமணியம்.

திருவொற்றியூர்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
வை. பார்த்தசாரதி
நாகலிங்கம் எம்.எல்.ஏ.
கிருட்டிணமூர்த்தி
டி. செல்வராஜ், டி. முருகேசன்

நெய்வேலி
கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ.
ஏ. வி. தண்டபாணி
ஆண்டகுருநாதன், கதிரேசன்.

நெல்லிக்குப்பம்
எஸ் ஜி. கிருட்டினன்
ள். கிருட்டினமூர்த்தி எம்.எல்.ஏ.

வேலூர்
மா. வெ. நாராயணசாமி எம்.எல்.ஏ.
மா. பா. சாரதி எம்.எல்.ஏ.
தோப்பூர்திருவேங்கடம் எம்.எல்.ஏ.

ஆரணி
முனு. ஆதி எம்.எல்.ஏ.
ஏ. சி. நரசிம்மன் எம்.எல்.ஏ.

அரக்கோணம்
கரூர் நல்லுசாமி
என். எஸ். பலராமன் எம்.எல்.சி.

மாதவரம்
இலட்சுமணன் எம்.பி.
ம. பொ. வேதாசலம்
மதிவாணன்
எம். கிருட்டினமூர்த்தி
எம். ஆர். அண்ணாமலை

திருவண்ணாமலை
ஏ. எல். சி. கிருட்டினசாமி
இரா. தருமலிங்கம் எம்.எல்.சி.

மணப்பாறை
எம். எஸ். மணி

கரூர்
குளித்தலை முத்துகிருட்டினன்

பேட்டைவாய்த்தலை
விருத்தாசலம் எம். செல்வராஜ் எம்.எல்.ஏ.

புதுக்கோட்டை
ஏ. கே. சிவசாமி (மதுரை)
துரைசாமி எம்.எல்.ஏ. (திருப்பூர்)

இராசிபுரம்
சேலம் எச். ஆர். விஜயன்
பரமதி சண்முகம்

சங்ககிரி
அத்தானி பாபு, பண்டரிநாதன்

திருச்செங்கோடு
மேட்டூர் அ. பாலு

எற்காடு
டி. சே. பொன்னுவேலு எம்.எல்.சி.
ஜெகன்னாதன்

தர்மபுரி
சிற்றுளி சுப்பிரமணியம்
முருகேசன்

கிருஷ்ணகிரி
ஏ. எம். இராஜா எம்.எல்.ஏ.
எம். கமலநாதன் எம்.பி.

திண்டுக்கல்
முன்னாள் மேயர் அப்துல் காதர்
கோவை பாலு,
விக்கிரமாதித்தராசன்

பழனி
அக்கினிராசு
திண்டுக்கல் தங்கவேலர்

சிங்காநல்லூர்
கோ. சி. மணி எம்.எல்.சி.
அரங்கநாதன் எம்.எல்.ஏ.

ஈரோடு
கோவை அரங்கநாயகம் எம்.ஏ.பி.எல்.
சுப்பிரமணியம் எம்.எல்.ஏ.
பி. எஸ். விசுவநாதன்

உடுமலைப்பேட்டை
ஜி. நீலமேகம் பி.ஏ.பி.எல்.
பர்வதக்கண்ணன் . . . .

பொள்ளாச்சி
மு. இராமநாதன் எம்.எல்.சி.
இராமசாமி (நகராட்சித் தலைவர்)

உதகமண்டலம்
குன்னூர் மாணிக்கம்
தேவராசன் எம்.எல்.ஏ.

கும்பகோணம்
தஞ்சை மாணிக்கவாசகம் பி.ஏ.பி.எல்.

மாயூரம்
எஸ். ஆர். இராதா
என். கிட்டப்பா எம்.எல்.ஏ.

திருவாரூர்
நன்னிலம் நடராசன்
தாழை கருணாநிதி எம்.எல்.ஏ.

நாகப்பட்டினம்
திருச்சி நாகசுந்தரம்
இராசமாணிக்கம் எம்.எல்.ஏ.
குடந்தை சு. பத்மநாபன்

இராசபாளையம்
துரை முருகன் எம்.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ.
நெல்லை நெடுமாறன்

தூத்துக்குடி
ஆலடி அருணா பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ.

சங்கரன்கோவில்
எட்மண்ட் பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ.
இராசபாளையம் பொன்னுசாமி

கோவில்பட்டி
களந்தை ஜின்னா, நெல்லை முருகு

சிவகெங்கை
நெல்லை தம்பித்துரை, புல்லையா

வடலூர்
புதுவை செ. முத்து எம்.எல்.ஏ.
இராசாங்கம் எம்.எல்.ஏ.

விருத்தாசலம்
கே. ஏ. கிருஷ்ணசாமி பி.ஏ.பி.எல்.
மணி, பத்மநாபன்

சிவகாசி
கே. ஆர். இராமலிங்கம் எம்.எல்.ஏ.

பரமக்குடி
சிவ. சண்முகசுந்தரம்
சுப. தங்கவேலன்

அருப்புக்கோட்டை
எம். எஸ். சிவசாமி எம்.பி.
தங்கபாண்டியன் எம்.எல்.சி.
பி. பி. என். நல்லதம்பி

விக்கிரமசிங்கபுரம்
கேரள சுந்தரம், நெல்லை ஆறுமுகம்

வீரவநல்லூர்
கே. எஸ். எஸ். உதுமான்,
ஏ. எல். சுப்பிரமணியம் எம்.ஏ.பி.எல்.

பாண்டிச்சேரி
திருச்சி நல்லுசாமி பி.ஏ.பி.எல்.
எம். ஏ. சண்முகம்
சி. ஆர். கோலப்பா எம்.எல்.சி.

அந்தமான்—போர்ட்பிளேயர்—நிக்கோபார்
து. க. கோபால், மருதவாணன்,
குப்புசாமி, எம். காதர்,
பாண்டியன், ஜெகன்னாதன்

பெங்களூர்
இரா. பாலசுப்பிரமணியம்

வண்டிப்பெரியார் (கேரளம்)
மருத்

சிறுவாணி எஸ்டேட் (பாலக்காடு மாவட்டம்)
பொன்னுசாமி, ஐயாசாமி,
எம். சண்முகம்

வால்பாறை
இரா. கோவிந்தசாமி,
இராமசாமி எம்.எல்.ஏ.

புகளூர்
கோவை பெரியசாமி
வை. இரத்தினவேலு

ஆப்பக்கூடல்
டி. பி. மூர்த்தி, சாஸ்திரி

மேட்டூர்
சென்னை அங்கப்பன்
இராசமாணிக்கம்
கன்னியப்பன் பி.ஏ.பி.எல்.

மேற்கோதையாறு
மைக்கேல் ராஜ் பி ஏ.பி.எல்.
சஞ்சீவி, வினைதீர்த்தான்

கீழ்க்கோதையாறு
இரணியேல் ரவி பி.ஏ.பி.எல்.
அம்புரோஸ், வீரமுத்து

பெரியநாயக்கன்பாளையம்
மெய்யப்பன்,
பல்லடம் பார்த்தசாரதி
உடுமலைப்பேட்டை குழந்தைவேல் பி.ஏ.பி.எல்.

காரமடை
ப. கோபால் எம்.எல்.ஏ.
காட்டூர் தேவராசு
மு. கோவிந்தராசன்

குன்னூர்
திருச்செங்கோடு டி. பி. நடேசன்
முருகேசன்

திருநெல்வேலி
எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி.
காவேரிமணியம் பி ஏ.பி.எல்., எம்.எல்.ஏ.
கோவை சுப்பையன் பி.ஏ.பி.எல்.

பேட்டை
அழகியநம்பி பி.ஏ.பி.எல்.
பத்மநாபன் எம்.எல்.ஏ.

தாழையூத்து
சூரியநாராயணன், அ. சந்திரன்

கள்ளக்குறிச்சி
திண்டுக்கல் சேதுராமலிங்கம்
கேசவலு எம்.எல்.ஏ.

மேட்டுப்பாளையம்
தூயமணி எம்.எல்.ஏ.
மாணிக்கவாசகம் எம்.எல்.ஏ.
ரசாக், இராமசாமி

திருப்பூர்
என். கணபதி பி.எஸ்சி., பி.எல்., எம்.எல்.ஏ.
அன்புக்கண்ணன், முருகேசன்
பெரியசாமி

குறிப்பு:— அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நாடாளுமன்ற — சட்டமன்ற — மேலவை உறுப்பினர்களைத் தவிர, மற்றைய நாடாளுமன்ற — சட்டமன்ற — மேலவை உறுப்பினர்கள், தங்கள் தங்கள் தொகுதிகளில் நடைபெறுகின்ற ஊர்வலங்கள் — பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தமிழ் மக்களின் ஈர நெஞ்சத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு

பிச்சைக்காரர் மறுவாழ்வுப் பணிக்கு ரூ. 1 கோடி சேர்ந்தது

முதல்வர் கலைஞர் மனம் நெகிழ்ந்து பாராட்டு — வேளாண்மை விளை பொருள் விற்பனை வாரிய விழாவில் உரை

சென்னை, நவ. 8—

"தமிழக மக்களின் ஈர இதயத்தை — இரக்கத் தன்மையை — மனிதாபிமான உணர்ச்சியைப் பாராட்டுகிறேன்; அந்த மனிதாபிமான உணர்வின் வழிவந்து, பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு நிதி வழங்கிய அனைவரையும் பாராட்டுகிறேன்"

என்று முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் நேற்று நடைபெற்ற விழா ஒன்றில் உரையாற்றுகையில் பெருமிதமுடன் குறிப்பிட்டார்.

முதலமைச்சர் கலைஞர் பிறந்த நாளையொட்டித் தமிழகத்தில் திரட்டப்பட்டுவரும் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு நேற்றுடன் ரூ. 1 கோடி சேர்ந்தது.

மாநில வேளாண்மை விளைபொருள் விற்பனை வாரியத்தினர் நேற்று ரூ. 2 14,000 முதலமைச்சரிடம் அளித்தனர்; ஏற்கனவே ரூ. 97 87,000 வசூலாகியிருந்தது.

சீரணியின் சார்பில் இரண்டாவது தவணையாக அமைச்சர் என். வி. நடராசன் அவர்களால் ரூ 3 000 வழங்கப்பட்டது.

வேளாண்மை விளைபொருள் வாரியத்தின் சார்பில், பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு நிதி வழங்கும் விழா, நேற்று இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டுறவுத் துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனார் அவர்கள், விழாவிற்குத் தலைமைதாங்கினார்.

தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் வாரியக் குழுத் தலைவர் பி. என். வேதநாராயணன், ரூ. 2,14,000-த்திற்கான 'செக்'கை முதல்வரிடம் வழங்கினார்.

அமைச்சர்கள் என். வி. நடராசன், ப. உ. சண்முகம், மற்றும் மாவட்ட வேளாண்மை விளைபொருள் வாரியத் தலைவர்களும் பேசினர்.

வாரியத்தின் சார்பில், திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் எம்.எல்.சி. அவர்கள், முதலமைச்சருக்குக் கேடயம் ஒன்று வழங்கினார்.

முதலமைச்சர் பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"விற்பனைக் களங்கள் அமைத்து — விளைபொருள்களை விவசாயிகளிடமிருந்து நேரடியாகப் பெற்று — வேண்டுவோருக்கு விற்பனை செய்யும் இந்த முறை ஏற்றதொரு முறை என்று கருதப்பட்டு — 2949-ஆம் ஆண்டு முதல் நல்ல முறையில் இந்த அமைப்பு பணியாற்றி — இதுவரையில் 100 விற்பனைக் கூடங்களை மாவட்டத் தலைநகரங்களிலும், வேறு பல இடங்களிலும் அமைந்துள்ளன.

மேலும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 50 விற்பனைக் களங்களை ஏற்படுத்தத் திட்டமிட்டிருக்கிறோம்; இவற்றைப் பயன்படுத்துகின்ற விவசாய மக்கள் நல்ல பலனை அனுபவித்து வருகிறார்கள்.

வியர்வை சிந்தி உழைத்தும் பல துன்ப துயரங்களை ஏற்று உணவுப் பொருட்களை விளைவிக்கும் விவசாயிகள், ஏமாற்றுக்காரர்களிடம் சிக்கிவிடாமலிருப்பதற்கும் — அவர்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வண்ணமும் இந்த அமைப்புக்கள் இயங்கிவருகின்றன.

11 மாவட்டங்களில் இந்தப் பணி செம்மையாக நடைபெற்று வருகிறது; இதற்கேற்ப, மேலும் விவசாயிகளைக் கவரக்கூடிய முறையில் நல்ல கட்டடங்கள் இந்த விற்பனைக்கூடங்களுக்கு அமைவது அவசியம்.

தற்போதுள்ள 100 விற்பனைக் கூடங்களில் 26 விற்பனைக்கூடங்களுக்குத்தான் சொந்தக் கட்டடங்கள் இருப்பதாக அறிகிறேன்.

இடம் கவர்ச்சியானதாக இருப்பது அவசியம்; விவசாயி, 'நாம் இந்த இடத்தில் கொண்டுவந்து கொடுக்கும் விளைபொருள் நியாயமான விலையைப் பெறும்' என்ற நம்பிக்கையைப் பெற அது உதவும்.

எவ்வளவு நேர்மையானவராக இருந்தாலும் ஒருவர், கையில் 100 ரூபாய் வைத்துக்கொண்டு — அழுக்குச் சட்டை போட்டவராக இருப்பாரானால் நேர்மையான போலீசுக்காரரும் அவரைச் சந்தேகிப்பார்; 'அது தான் சரி' என்று கூற நான் தயாராக இல்லை; ஒருவரிடம் 100 ரூபாய் இருக்குமானால், குறைந்தது அவன் துவைத்த சட்டையாவது போட்டிருக்க வேண்டுமென்றும் — அதுவே பொருத்தமானது என்றும் கருதுவது உலக நியதியாக இருக்கிறது.

விவசாயிகளை ஏமாற்றுவதையே தொழிலாகக்கொண்டு ஒரு பிரிவினர் இயங்கிவருகின்றனர்; ஆகவேதான், அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்க இந்த அமைப்புக்கள் இருக்கின்றன.

ஆட்களும் — அமைப்பும் மாத்திரம் இருந்தால் போதாது; நல்ல கட்டடங்களும் இருக்க வேண்டும்.

என்னை அழைத்து இந்த அமைப்பினர் பல கட்டடங்களுக்காக அடிக்கல் நட வைத்திருக்கிறார்கள்; விரைவில் அவை கட்டி முடிக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கட்டடங்கள் எழுப்பப்பட அரசினர் சார்பில் ஒத்துழைப்புத் தரப்பட்டு அவை விரைவில் கட்டி முடிக்கப்படுமென நம்புகிறேன்."

குறைந்த விலையில் அரிசி கிடைக்க ஏற்பாடு

அரசே கடைகளைத் திறக்கும்

சென்னை, நவ. 8—

"அரிசி விற்பனை செய்வதற்காகத் தேவைப்பட்டால் சென்னை நகரில் மேலும் அரிசிக் கடைகள் திறக்கப்படும்"

என்று உணவு அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"அரசு, தனது கிடங்கிலிருந்து கிலோ ரூ. 1.12 விலைக்கு விற்க அரிசியை விடுவிக்கத் தயாராக இருக்கிறது; ஆனால் குறைவான இலாபமே இருப்பதாகக் கூறி வணிகர்கள் இதனை வாங்க முன்வருவதில்லை.

எனவே, அரசே கடைகளைத் திறக்கலாமா என்பது பற்றி ஆராய்ந்துவருகிறது."

போக்குவரத்துத்துறை அமைச்சர்

ச. இராமச்சந்திரன்

நிகழ்ச்சிகள்

நவ. 11 காலை 10-மணி: அத்திக்கடவு—மின் தொழிலாளர் வரவேற்பு; 11-மணி: கெத்தை—மின் தொழிலாளர் வரவேற்பு; மாலை 3-30 மணி: குந்தா—தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க வரவேற்பு — பொதுக்கூட்டம்; 4-30 மணி: உதகை—பொதுக்கூட்டம்.

நவ. 12 காலை 6-40 மணி: காட்பாடி; 10-மணி: கீரைசாத்து—ஊராட்சிமன்ற மேல்நீர்த் தொட்டித் திறப்பு; 11-மணி: மேல்பாடி—ஊராட்சிமன்ற வரவேற்பு; மதியம் 12-மணி: கரிகிரி—ஊராட்சி மன்ற வரவேற்பு; 12-30 மணி: மேல்மாயில்—ஊராட்சிமன்ற வரவேற்பு — விவசாயக் கிடங்கு திறப்பு — பட்டா வழங்கல்; மாலை 4-மணி: தமிழ்நாடு—மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க வரவேற்பு; 5-மணி: காட்பாடி—ஊராட்சி ஒன்றியம் வரவேற்பு; 6-மணி: அம்முண்டி—குடிநீர்த் தொட்டித் திறப்பு; இரவு 7-மணி: காட்பாடி—பொதுக்கூட்டம்.

நவ. 13 காலை 9-மணி: கிரிசமுத்திரம்—ஊராட்சி வரவேற்பு — தரைமட்ட நீர்த்தொட்டித் திறப்பு; 10-மணி: ஆலங்காயம்—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 11-மணி: ஆலங்காயம்—பேரூராட்சி வரவேற்பு; மாலை 4-மணி: செட்டியப்பனூர்—ஊராட்சி வரவேற்பு — துரை ஏரி தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டித் திறப்பு; 4-30 மணி: வாணியம்பாடி—நகராட்சி வரவேற்பு; 5-மணி: எம். ஜி. ஆர். மன்றத் திறப்பு; 5-30 மணி: வர்த்தகர்கள் சங்க வரவேற்பு; 6-மணி: காந்திநகர்—மின் விளக்கு ஏற்று விழா; 6-30 மணி: தமிழ்நாடு—மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கக் கிளை துவக்க விழா; 7-30 மணி: பொதுமக்கள் வரவேற்பு.

கள்ளக் கடத்தல் படகு தீக்கிரை

ரூ. 10 இலட்சம் மதிப்புள்ள சரக்குடன் அழிந்தது

படகைச் செலுத்தியவர்களே தீ வைத்துக் கொளுத்தினராம்

கோழிக்கோடு, நவ. 8—

துபாய்க்கும் — கேரளக் கடற்கரைக்கும் இடையே கள்ளக்கடத்தல் தொழிலில் ஈடுபட்டிருந்த விசைப் படகு ஒன்றை, அதை இயக்குபவர்களே தீ வைத்து அழித்திருக்கின்றனர்.

தங்களைச் சுங்கத் துறையினர் பிடிக்க வருவதை அறிந்து, படகிலிருந்து தடயங்கள் ஏதும் கிடைக்காமலிருப்பதற்காகப் படகிற்குத் தீ வைக்கப்பட்டிருப்பதாகச் சுங்க அதிகாரிகள் கூறினர்.

தீ வைத்தபிறகு கடலில் தவித்துக்கொண்டிருந்த அவர்களைச் சுங்க அதிகாரிகளே காப்பாற்றியிருக்கின்றனர்.

படகில் சுமார் ரூ. 10 இலட்சம் மதிப்புடைய நூல்கள் இருந்தனவாம்.

படகில் 10 பேர் இருந்திருக்கின்றனர்; எதிர்பாராதவிதமாகப் படகில் தீப்பிடித்துவிட்டதாக அவர்கள் கூறுகின்றனர்.

கொரட்டூர் குடியிருப்புக் காலனித் திட்டம்

சுழல் நிதியிலிருந்து கடன்

புதுடில்லி, நவ. 8—

சென்னைக்கு அருகில் கொரட்டூர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூ. 92 இலட்சத்திற்கான ஒரு 'செக்'கை, மத்திய பொதும் பணித்துறை — வீட்டு வசதித் துறை துணையமைச்சர் ஐ. கே. குஜ்ரால், தமிழ்நாடு வீட்டு வசதித் துறை அமைச்சர் க. இராசாராம் அவர்களிடம் கொடுத்தார்.

கொரட்டூர் குடியிருப்புக் காலனிகளுக்கு வீட்டு வசதி சுழல் நிதியிலிருந்து ரூ. 2 38 கோடி கடன் தருவதாக வாக்களிக்கப்பட்டிருக்கிறது; அதன் முதல் தவணையாக இந்தத் தொகை தரப்பட்டது.

கொரட்டூர் மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக சுமார் 1,160 வீட்டு மனைகள் மேம்பாடு செய்யப்படும்; இவற்றில் 465 மனைகள் குறைந்த வருமானமுள்ள பிரிவினருக்காக ஒதுக்கப்படும்.

இந்தத் திட்டத்தில், மிகக் குறைந்த வருமானமுள்ள பிரிவினருக்கு 136 வீடுகளும், குறைந்த வருமானமுள்ள பிரிவினருக்கு 65 வீடுகளும், நடுத்தர வருமானமுள்ள பிரிவினருக்கு 60 வீடுகளும் ஒதுக்க வகை செய்யப்படும்.

இவை தவிர, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும் — நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கும் 340 பல அடுக்கு கட்டடங்கள் கட்டப்படும்.

தமிழ்நாடு சட்டமன்றம் — டிசம்பர் 4-ம் நாள் கூடும்

சென்னை, நவ. 8—

"தமிழ்நாடு சட்டப் பேரவைக் கூட்டம், டிசம்பர் 4-ம் நாள் காலை 10 மணிக்குக் கூடும்.

"சட்டமன்ற மேலவைக் கூட்டம் அன்று மாலை 4-மணிக்குக் கூடும்"

என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மதுரை வேளாண்மைக் கல்லூரி — ஆராய்ச்சி நிலையமாக உயர்த்தப்படுகிறது

கோவை, நவ. 8—

மதுரை வேளாண்மைக் கல்லூரி, ஆராய்ச்சி நிலையமாக உயர்த்தப்பட்டிருக்கிறது; இதுவரையில் அது சாதாரணக் கல்லூரியாக இருந்துவந்தது.

தென் மாவட்டங்களில் விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக இக்கல்லூரி, தனது ஆராய்ச்சியைப் பயன்படுத்தும்.

இலண்டனில் முதல்வர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விமான நிலையத்தின் வாயிலிலும் ஏராளமான தோழர்கள் முதலமைச்சரை வழியனுப்பத் திரண்டிருந்தனர்.

விமான நிலையத்தில் பிரம்மாண்டமான மேடை அமைக்கப்பட்டிருந்தது; மேடைக்கு எதிரில் மின் விளக்குகளாலேயே, 'வெற்றியுடன் திரும்பி வருக' என எழுதப்பட்டிருந்த வாசகங்கள் பளிச்சிட்டன.

மாநில ஆளுநர் கே. கே. ஷா, மேலவைத் தலைவர் சி. பி. சிற்றரசு, பேரவைத் தலைவர் கே. ஏ. மதியழகன், கழகம் பொதுச் செயலாளரும் கல்வியமைச்சருமான நாவலர் இரா. நெடுஞ்செழியன், மற்றும் தமிழக அமைச்சர் பெருமக்கள், புதுவை மாநில முதலமைச்சர் எம் ஓ.எச். பாரூக் -- மற்றும் அமைச்சர் பெருமக்கள், சென்னை மேயர் சா. கணேசன், மதுரை நகர மேயர் எஸ். முத்து, தமிழக அரசு அலுவலர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், மாநகராட்சி மன்றத் தி.மு.க. உறுப்பினர்கள், சட்டமன்ற -- நாடாளுமன்றத் தி.மு.க. உறுப்பினர்கள் மாலை அணிவித்தனர்.

கழகப் பொருளாளர் -- புரட்சிநடிகர் சார்பிலும் மாலை அணிவிக்கப்பட்டது.

மற்றும் சுதந்தராக் கட்சியைச் சேர்ந்த சா. கணேசன் எம்.எல்.சி., இந்திரா காங்கிரசைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் பூவராகன், 'விடுதலை' வீரமணி, சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், ஔவை டி. கே. சண்முகம், சீனிவாசக் கரையாளர், செட்டிநாட்டரசர் முத்தையா செட்டியார், தீர்த்தகிரி கவுண்டர், தென் வட்டார இராணுவத் தளபதி கே. ஏ. எஸ். இராசா, இன்ஸ்பெக்டர்-ஜெனரல் எப். வி. அருள், சென்னையிலுள்ள அமெரிக்கத் தூதர் ஆகியோரும் முதல்வரை வழியனுப்பினர்.

மாலை 6-40 மணியளவில், முதலமைச்சர், விமானத் திடலில் நிரம்பி வழிந்த பல்லாயிரக்கணக்கான மக்களிடமும், கையசைத்து விடைபெற்றுக் கொண்டார்.

நன்றியுரை

விமான நிலையத்தில் கூடி நின்ற பல்லாயிரக்கணக்கான மக்களிடம் விடைபெறும்முகத்தான், முதல்வர் கலைஞர் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"உங்கள் அனைவருடைய நல்லெண்ணமும் -- இனிய வாழ்த்துக்களும் துணையாக அமைய நான் அமேரிக்கச் சுற்றுப்பயணத்தை மேற்கோள்கிறேன்.

"நான் இல்லாத நேரத்திலும், என்றும்போல் தமிழ்நாட்டுப் பண்பினையும் -- அண்ணா அவர்கள் வகுத்துத்தந்த அன்பு நெறியையும் கடைப்பிடித்து, 'என்றும்போல் தமிழகம் அமைதி காக்கிறது' என்று சொல்லத்தக்கவிதத்தில் திகழ்வீர்கள் -- ஒத்துழைப்புத் தருவீர்கள் என்று நம்புகிறேன்.

"எத்தனை ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்தாலும், தமிழர்களின் இதயப் பிணைப்பு நிலைத்திருக்கத்தக்கது -- பிரிக்கவொண்ணாதது!

"உங்கள் அத்தனைப்பேருடைய அன்பு முகம் காண விரைவில் திரும்புவேன்.

"திரளாக வந்து வாழ்த்தளித்த தமிழ்ப் பெரியோர்களே -- அன்புசால் நண்பர்களே -- அரசு அலுவலர்களே -- மாண[illegible] தோழர்களே -- கழகக் [illegible]களே -- உங்கள் அனைவருடைய காலடியிலும் நன்றியைக் குவிக்கின்றேன்; அண்ணா நாமம் வாழ்க!"

கலையுலகம் தோற்றுவித்த சகாப்தம்

சமுதாயசீர்திருத்தத்துறையில் வீறுநடை போடுகிறது

மக்களை நல்ல இடம் நோக்கி அழைத்துச் செல்லக் கலை பயன்பட வேண்டும்

சிறந்த திரைப் படங்களுக்குப் பரிசுகள் வழங்கி முதல்வர் கலைஞர் உரை

சென்னை, நவ. 8—

"நல்ல எண்ணங்கள் மக்கள் உள்ளத்தில் பதியும் வகையிலும் -- மக்களை நல்ல இடத்தை நோக்கி அழைத்துச் செல்லும் வகையிலும் கலை இருக்கவேண்டும்; கலை கலைக்காக மட்டுமல்லாமல், மற்றவர்களையும் வாழவைக்க சமுதாயச் சீர்திருத்த எண்ணங்களைத் தரும் அளவில் ஒரு சகாப்தம் தோன்றியது; இன்று அந்தச் சகாப்தம் வீறுநடை போட்டு வருகின்றது; அதற்கு இத்தகைய விழா பயன்படுவதாக இருக்கவேண்டும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், கடந்த ஆண்டில் வெளியான சிறந்த படங்களுக்கும், சிறந்த நடிகர் -- நடிகைகளுக்கும் பரிசுகள் அளித்துப் பேசுகையில் சுட்டிக்காட்டி வலியுறுத்தினர்.

கலைவாணர் அரங்கில் நடைபெற்ற இவ்விழாவுக்கு ஆளுநர் கே. கே. ஷா தலைமைதாங்கினர்.

நடிகர் -- நடிகைகளுக்கும், கலைஞர்களுக்கும், முதலமைச்சர் கலைஞர் பரிசுகள் வழங்கினர்.

பரிசுத் தொகையுடன், 'மகர யாழ்' கேடயமும் -- நற்சான்று இதழ்களும் வழங்கப்பட்டன.

சிறந்த படமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 'வியட்னாம் வீடு' படத்துக்கு ரூ. 20,000 பரிசு வழங்கப்பட்டது; இந்தப் பரிசை, படத் தயாரிப்பாளர் வி. சி. சண்முகம் சார்பில் பி. என். பிள்ளை பெற்றுக் கொண்டார்.

இரண்டாவது சிறந்த படமான 'எங்கள் தங்கம்' படத் தயாரிப்பாளருக்கு ரூ. 10,000 பரிசு வழங்கப்பட்டது; இதை முரசொலி மாறன் பெற்றுக்கொண்டார்; அந்தப் பணத்தை, சென்னையில் அமைக்கப்பட்ட இளங்கோவடிகள் சிலையின் செலவுக்காக நன்கொடையாகக் கொடுப்பதாகக் கூறி, முதலமைச்சரிடம் திருப்பிக் கொடுத்தார்.

சிறந்த படத்திற்கான 3-வது பரிசை 'நம்ம குழந்தைகள்' பட அதிபர் ராமா நாயுடுவும், 4-வது சிறப்புப் பரிசை 'திருமலை தென் குமரி' பட அதிபர் ஏ. பி. நாகராசனும் பெற்றுக்கொண்டார்.

சிறந்த நடிகருக்கான ரூ 5,000 பரிசை ஜெமினி கணேசன் பெற்றுக் கொண்டார்; அந்தப் பணத்தை, பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஏழை மாணவ -- மணவிகளுக்காக முதலமைச்சரிடம் திருப்பிக் கொடுத்தார்.

சிறந்த நடிகைக்கான ரூ 5,000 பரிசை நடிகை கே. ஆர். விஜயாவும், சிறந்த இயக்குநருக்கான ரூ. 5,000 பரிசை மாதவனும் பெற்றுக் கொண்டனர்.

பரிசுபெற்ற நடிகர் -- நடிகைகளையும், மற்றும் திரைப்படத் துறையைச் சேர்ந்த பல்வேறு கலைஞர்களையும் பாராட்டி, ஆளுநர் கே. கே. ஷாவும், முதலமைச்சர் கலைஞரும் பேசினர்.

முதலமைச்சர் பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"பேரறிஞர் அண்ணா அவர்கள், 1968-ம் ஆண்டில், சிறந்த கலைஞர்களை ஊக்குவிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தினர்.

இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட போது குறைவான பரிசுகளே கொடுக்கப்பட்டன; இன்று இந்த பரிசு 18 பேருக்கு வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தை அனைத்திந்திய ரீதியில் நடத்திக்கொண்டுவருகிறார்கள்; என்றாலும், அப்படிப்பட்ட விருதுகளையும் தமிழகக் கலைஞர்கள் பெற்றிருக்கிறார்கள்; எனினும் தமிழ்நாட்டிற்கு உரிய இடம் இன்னும் கொடுக்கப்படவில்லை என்பதை இன்னும் எடுத்துச் சொல்லவேண்டிய நிலை இருக்கிறது.

பரிசுபெற்றவர்களை வாழ்த்துகிறேன் -- பாராட்டுகிறேன்; எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல் கண்டிப்பாக இருந்து தங்கள் தீர்ப்பினை அளித்த குழுவினர்களுக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

இராயபுரம் எட்டியப்ப நாயகர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் கழகத் திறப்பு விழா

10—11—1971 மாலை 4-30 மணிக்கு சென்னை – இராயபுரம் எட்டியப்ப நாயகர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் கழகத்தைத் தமிழகச் சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. ஏ பி. சனார்த்தனம் திறந்துவைப்பார்.

வீட்டுக்கு வீடு போர் நடைபெறுமாம்

பூட்டோவின் பூச்சாண்டி

பீகிங் நவ. 9—

"இந்தியாவுக்கும் -- பாகிஸ்தானுக்கு மிடையே போர் மூண்டால், அது, முழுப் போராகவே இருக்கும் -- வீட்டுக்கு வீடு நடைபெறும் போராக மாறும்.

"இதன் விளைவாகக் கங்கையிலும் -- சிந்துவிலும் இரத்த ஆறு ஓடும்; கங்கை ஆற்றில் தண்ணீருக்குப் பதில் இரத்தம் தான் ஓடும்"

என்று பீகிங்கில் நடைபெற்ற விருந்தொன்றின்போது செய்தியாளர்களிடம் பூட்டோ கூறியதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

எம். ஜி. ஆர். உடல்நிலை

நாவலர் இரா. நெடுஞ்செழியன் நலம் விசாரித்தார்

சென்னை, நவ. 9—

கழகம் பொருளாளர் -- புரட்சி எம். ஜி. ஆர். அவர்கள், உடல் நலமின்றி இராமாவரம் தோட்டத்தில் ஓய்வு எடுத்துவருகிறார்; எனவே, 9, 10, 11-ம் நாட்களில் அவர் கலந்துகொள்வதாக இருந்த தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளது; படப் பிடிப்புகளும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

ஒரு வெளிப்புறப் படப் பிடிப்பில் கலந்துகொண்டு திரும்பிய போது, அவர் காலில் முள் குத்திப் பழுத்த காயத்திற்கு அறுவைச் சிகிச்சை நடைபெற்றது.

இன்னும் சரிவர ஊன்றி நிற்க முடியாமல் வலி இருப்பதாகவும், குணப்பட்டதும் நவ. 11-ம் நாள் அளவில் தேர்தல் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருப்பதாகவும் புரட்சி நடிகர் தெரிவித்தார்.

நாவலர் சந்திப்பு

கழகப் பொதுச்செயலாளர் நாவலர் அவர்கள், நேற்று காலை புரட்சி நடிகரை இராமாவரம் தோட்டத்தில் சென்று பார்த்து நலம் விசாரித்தார்.

இலேசாக வலி குறைந்திருப்பதாகப் புரட்சி நடிகர் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செங்குந்தர் தெரு, சென்னை-16) [illegible] வெளியிடப்பெறுகிறது.

வெளி மாநிலப் பரிசுச் சீட்டுகள்

தமிழ்நாட்டில் விற்பனை செய்யத் தடை

காரணம் பற்றிய நிலைமை விளக்கம்

சென்னை, நவ. 9—

தமிழ்நாட்டில் வெளிமாநிலப் பரிசுச் சீட்டுகள் விற்பனையை உடனடியாகத் தடை செய்யத் தமிழக அரசு முடிவு செய்து உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

ஒரு மாநிலப் பரிசுச் சீட்டு விற்பனையை இன்னொரு மாநில அரசு தடை செய்வது இது இரண்டாவதாகும்; ஏற்கனவே மாராஷ்டிர மாநிலம், தங்கள் மாநிலத்தில் வெளி மாநிலப் பரிசுச் சீட்டு விற்பனையைத் தடை செய்திருக்கிறது.

"வெளிமாநிலங்கள், கட்டுப்பாடின்றி அவ்வப்போது அளவுக்கு மீறிய பரிசுத் தொகையை அறிவித்து -- பரிசுச் சீட்டுகளை இங்கு விற்கின்றன; இதனால் தமிழக அரசுப் பரிசுச் சீட்டு விற்பனை பாதிக்கப்பட்டு --- மாநிலத்திற்கு நியாயமாகச் சேரவேண்டிய வருமானமும் மாநில வளர்ச்சித் திட்டங்களுக்காகப் பரிசுச் சீட்டு விற்பனை மூலம் ஏழைகள் கொடுக்கும் பணம் கிடைக்காமல் போவதால், வெளிமாநிலப் பரிசுச் சீட்டுகள் விற்பனைக்குத் தமிழகத்தில் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது"

என்று உயர்தர அதிகாரி ஒருவர் விளக்கினர்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"வெளிமாநிலப் பரிசுச் சீட்டுகள் மூலம் தாறுமாறுகப் பரிசுப் பணங்கள் வழங்கப்படுவதால் தமிழகப் பரிசுச் சீட்டு விற்பனை பாதிக்கப்பட்டுள்ளது" என்றும் அவர் சொன்னர்.

"இதேபோன்று நமது மாநிலப் பரிசுச் சீட்டு விற்பனையை மற்ற மாநில அரசுகள் தடை செய்யாதா?"

என்று கேட்டதற்கு, 'அதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை' என்று அவர் பதிலளித்தார்; இதன் தொடர்பாக அவர் குறிப்பிட்டதாவது:—

"தடை விதிப்பதற்கு முன்பு, எல்லா அம்சங்களும் ஆராயப்பட்ட பிறகே முடிவு எடுக்கப்பட்டது.

"வெளிமாநிலங்களில் தமிழகப் பரிசுச் சீட்டுகள் விற்பனை ஓரளவுக்கே உள்ளது.

"அப்படியே அவர்கள் தடை விதித்தாலும் அதைத் தமிழக அரசு பொருட்படுத்தாது."

சென்னை 34 ல் உள்ள இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை ஆணையாளர் முன்பாக

மனு எண்: 359/1971

நிர்வாக தர்மகர்த்தர்,
ஸ்ரீ பாலவேலபதங்கீஸ்வரர் கோயில்,
பாலூர், செங்கற்பட்டு வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம் —மனுதாரர்

செங்கற்பட்டு மாவட்டம் செங்கற்பட்டு வட்டம் பாலூர் கிராமம் ஸ்ரீபாலவேலபதங்கீஸ்வரர்கோயில் விஷயமாக:—

செங்கற்பட்டு மாவட்டம் செங்கற்பட்டு வட்டம் பாலூர் கிராமம் ஸ்ரீ பாலவேலபதங்கீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமாகச் செங்கற்பட்டு வட்டம் பாலூர் கிராமத்தில் பட்டா எண் 1517—சர்வே எண் 2174-ல் உள்ள ஏக்கர் 8 57 செண்ட் விஸ்தீரணம் உள்ள புஞ்சை நிலத்தினை, செண்ட் ஒன்றுக்கு ரூ. 15 (ரூபாய் பதினைந்து மட்டும்) எனத் தொடக்க விலையாகக் கொண்டு பொது ஏலத்தில் விற்பனை செய்ய அனுமதி வேண்டி 1959-ம் வருடத்திய இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 34-வது பிரிவின்கீழ் செய்து கொண்ட மனு:—

நோட்டீஸ் மனு எண் 359/71 டி. 1 நாள் 1—11—71

மேற்படி மனு குறித்து சென்னை-34 நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையிலுள்ள தமது அலுவலகத்தில், இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித்துறை ஆணையாளர் அவர்களால் 18—12—1971 அன்று பிற்பகல் 2-மணியளவில் விசாரணை நடத்தப்படும்.

2. மேற்படி மனு குறித்து கருத்துரைகளோ அல்லது மறுப்புரைகளோ எவையேனும் இருப்பின் அவற்றை எழுத்து மூலமாக 13—11—1971 அன்றோ அல்லது அதற்கு முன்போ இந்த அலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்பி வைக்க வேண்டும்.

3. முறையீடுகள் எவையேனும் இருப்பின் அவற்றினை நேரிலும் விசாரணையின்போது தெரிவித்துக் கொள்ளலாம்.

கோ. நந்தகோபால்
ஆணையாளருக்காக

கல்வி -- உள்ளாட்சித்துறை அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிகள்

நவ. 10 காலை 11-மணி: உடுமலைப்பேட்டை; மாலை 4-மணி: சுல்தான் பேட்டை; 5-மணி: கொடுவாய்; 6-மணி: காங்கேயம்; இரவு 7-மணி: குமாரபாளையம்; 8-மணி: மொடக்குறிச்சி.

நவ 11 காலை 9-மணி: காஞ்சிகோவில்; 10-மணி: நல்லாம்பட்டி; 11-மணி: பாண்டியன் பாளையம்; நண்பகல் 12-மணி: திங்களூர்; மாலை 3-மணி: ஆபிகவுண்டன் பாளையம்; 4-மணி: பெருந்துறை; 5-மணி: பெருந்துறை விஜய் தொழிற்சாலை திறப்பு; 6-30 மணி: சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி நிகழ்ச்சிகள்.

தொழிலாளர் நல அமைச்சர்

என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

நவ. 9, 10, 11: பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதியில் சுற்றுப்பயணம்.

உணவு -- வருவாய்த் துறை அமைச்சர்

ப. உ. சண்முகம்

நிகழ்ச்சிகள்

நவ. 9, 10: பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதியில் சுற்றுப்பயணம்.

மின்துறை அமைச்சர்

ஓ. பி. இராமன்

நிகழ்ச்சிகள்

நவ. 10, 11, 12: பொள்ளாச்சி.
நவ. 13: திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம்.